# சரணாகதி நாற்பது

பொய்கையடியான்

பழங்களில் அழகிய அத்திப்பழத்தின்
உள்ளே பிளந்தால் புழுவும் பூச்சியும்
பழக நல்லவர் போல் காணும் மனிதன்
1. உள்ளத்துள் மிகுந்தது குரோதமும் காமமும்!

காமவெறி பிடித்து இளமையில் திரிந்து
பெண்கள் தரும் சுகமே சுகமென்றுநின்
நாமத்தைச் சொல்ல மறந்து வாழ்நாளில்
2. கண் இருந்தும் குருடனாக வாழ்ந்திடுவர்!

வாழ்ந்து வந்த நாட்களில் நல்லது எதுவும்
செய்ய மறந்து தேகமே ஆத்மாவென தங்கள்
வாழ்க்கையை நடத்தி வந்த அவர்களையும்
3. மெய்யன்புடனே தடுத்தாட்கொள்வார் குருவுமே!

குருவின் இலக்கணம் சீடர்கள் செய்த
பாவங்களைப் போக்கிட அந்த எம்பெருமான்
உருவில் தோன்றி அவர்களுக்கு உபதேஸித்து
4. தேவனின் திருவடியில் சோத்து வைப்பார்!

வைப்பாக இருப்பதெல்லாம் செய்த பாவங்கள்
என்ற நிலையில் வாழ்ந்து கொண்டு எமனின்
கைப்பாவையாக உழன்று வந்த அந்த நிலை மாறி
5. சென்ற நாட்களில் செய்தவற்றை மறந்திடுவார்!

மறந்திடுவார்  செய்த பாவங்களை முழுவதுமாக
மனம் திருந்திய நிலையில் நின்று அவர்களும்
பிறவி எடுப்பர் மற்றவர்கள் நன்கு வாழ்ந்திட
6. தினம் தொழுதிடுவார் மற்றவர்க்காக வேண்டி!

வேண்டியவற்றையெல்லாம் தந்திடும்
பரம்பொருளான நாராயணன் இருக்க
தூண்டிலில் சிக்கிய உயிர்போன்று மாந்தர்
7. பிறதேவதைகளை நாடிச் செல்கின்றனரே!

செல்லுகின்ற பாதை எதுவென்று உணராதே

தவறான பாதைகளில் அழைத்துச்சென்றிடும்

பல்வேறு துறவிகளை நம்பி அவர்களின்

8. தவறான பரிகாரங்களை மாந்தர் செய்கின்றனா!

செய்கின்ற செயல் நல்லதாக இருந்தால்

நன்மைகள் நம்மைத் தானாக வந்தடையும்

எய்கின்ற பாணம் நம்மையே தாக்கிடும்

9. என்பது பெரியவாகள் சொன்ன பொன்மொழி!

பொன்மொழிகளின் பொருளை நன்குணர்ந்து

வாழ்க்கையை நாமும் நேராக நடத்தி வந்தால்

வன்மொழி என்பதே நம்நாவில் தோன்றாது

10. வாழ்க்கையும் வளம் நிறைந்ததாக இருக்கும்!

இருக்கின்ற நாட்களில் அவன் நாமாவை

தினமும் நாம் சொல்லி மகிழ்ந்தால் பிறர்

வெறுக்கின்ற நிலை என்பது மாறி நம்முடைய

11. மனமும் செயலும் மிக நல்லவைகளாகும்!

நல்லவர்களையே அண்டி நாம் வாழ்ந்தால்

பயங்கள் முழுவதும் நம்மை விட்டு விலகும்

அல்லல் நீங்கி நம் வாழ்வினில் என்றும்

12. பயன்கள் நம்மை வீடு தேடியே வந்திடும்!

வந்திடும் எவரும் இவ்வுலகில் நிலையாக

இருந்து விடுவதில்லை என்பதை மனதில்

சிந்தித்து நாமும் நன்கு செயல்பட்டால்

13. விருந்தாக வாழ்வு அமையும் என்பதில் ஐயமில்லை!

ஐயம் வேண்டாம் சரணென்று அடைந்தவரை

காப்பேன் என கண்ணன் கீதையில் கூறியபடி

வையத்திலுள்ளோர் தங்கள் பிறவி முடிந்ததும்

14. சேர்ப்பான் அவர்களை பரமபதத்தில் இது உறுதி!

உறுதியாக வாழ்நாளில் எம்பெருமான் ஒருவனே

பரன் என்று அவனைச் சரணடைந்தவர்கள்

இறுதியில் அவனுடன் சேர்ந்து முக்தர்களாகிட

15. வரம் தன்னைதந்திடுவான் நம்வாழ்வு மலாந்திட!

மலர்ந்த மலர்களை விடுத்து மக்களும்
உலர்ந்த சருகுகளை விரும்பிட மாட்டார்
பாவிகளான என்போன்றவரை விடுத்துஅப்
16. பாவி மக்களை வதைப்பது முறையாகுமோ!
முறைதவறி அன்று அன்னை சீதையிடம்
இந்திரன் மகனான ஜயந்தனும் விளையாட
இறைவனும் அருகிலிருந்த துரும்பைக்கிள்ளி
17. மந்திரித்து அஸ்திரமாக அவன்மீது ஏவினான்!
ஏவினான் அன்று சுடராழியை முதலையின் மீது
ஆதிமூலமே என்றலறிய வேழத்தினைக்காக்க
நாவினால் அவன் நாமத்தைச் சொல்லும்அந்த
18. நாதியற்றவரை விரைந்தே வந்து காத்திடுவான்!
காத்திடுவான் என்ற திடமான எண்ணத்துடன்
பாலன் நாராயணன் நாமத்தையும் சொல்லிட
ஆத்திரமடைந்த தந்தை அவனை துன்புறுத்த
19. காலனாய் மாறி தந்தையை கொன்றான் இறைவனுமே!
இறைவன் அவன் ஒருவனே என்றிருப்போர்க்கு
மறைபுகழும் அந்த குறையற்ற கோவிந்தனும்
குறைகளை அவர்கள் வாழ்விலிருந்து விலக்கி
20. நிறைவான சுகங்களை அவர்க்கு தந்திடுவான்!
தந்திடுவான் சகல சுகங்களையும் நமக்கு
மரணம் என்பது ஏற்படும் இறுதிகாலம் வரை
மந்திபாய் வேங்கடமலைக்கரசனின் பாதத்தை
21. சரணென தம் ஆத்மாவை ஒப்படைத்தவர்கள்!
கண்ணிருந்தும் குருடனாக நாம் வாழ்நாளில்
அன்று செய்த பிழைகள் யாவும் ஒன்றாக சேர்ந்து
எண்ணில் அடங்காப் பாவங்களென உருவெடுத்து
22. இன்று நம்மை சூழ்ந்து கிடக்கின்றனபுதராக!
புதராக மண்டி கிடக்கும் கள்ளிகளை விடுத்து
மணம் பரப்பும் செடிகளை வெட்டுவார் போன்று
புதிராக இருக்கின்றது என்போன்ற பாவிகளை விடுத்து
23. குணம் நிறைந்தவரை நீயும் அழைத்துச் செல்வது!
அழைத்துச் செல்லவந்த தம்பியான பரதனையும்-அ
பயக்கரம் நீட்டி அனுப்பி வைத்தாய் பாதுகைகளுடன்
பிழை உணாந்து வந்து சரணடைந்த விபீஷணனை
24. தயவுடன் உன்பக்கலில் அவனை சேர்த்து கொண்டாய்!

சேர்த்துக்கொண்டாய் குலம்பாராது சோதரனாக
அக்கரை கொண்டு சேர்க்கும் குஹனையும் அன்று
சேர்த்துக்கொண்டாய் குற்றம்பாராது அடியேனையும்
25. அக்கறையுடன் உன் பக்தர்களில் ஒருவனாக இன்று!
இன்று இருப்பவர் நாளை இருக்க மாட்டாரென
உணராது இந்தக்கலியுகத்தில் மக்கள் பணம் பதவி
என்று அலைகின்றனர் அவை நிலையற்றவை என்று
26. உணராமல் தம்வாழ்நாட்களில் அவற்றை நாடி!
நாடிய யாவையும் நமக்கு வாழ்வில் கிடைத்திட்டால்
பரம்பொருளான அந்த எம்பெருமானை நாமும்
தேடிச்சென்று அவன் உறையும் தலங்களிலெல்லாம்
27. வரம்தான் வேண்டி அவனை தினம் வழிபடுவோமா!
வழிபடுகின்றனர் மக்கள் எல்லா தேவர்களையும்
எதைத்தின்றால் பித்தம் தெளியும் என்கின்ற நிலையில்
விழியில் நீர்மல்க வேண்டுகின்றனர் அவர்களிடம்
28. அதைத்தரும் சக்தி அவர்களுக்கு கிடையாதென்றறியாமல்!
அறியாமல் நாம் செய்திடும் பிழைகளுக்குவுடனே
தகுந்த பலன் கிடைத்திடுமென்று இருக்கும்போது
அறிந்தே செய்த பிழைகளுக்குத்தண்டனை நமக்கு
29. வெகுவாக இருக்கும் என்பதைக்காணலாம் கண்முன்!
கண்முன் இருக்கும் அந்த கண்ணனை தெய்வமெனவுணராது
ஆய்குலப்பெண்கள் அவனை குழந்தையாகவேக்
கண்டு அவன் செய்த பிழைகளை அன்னையிடம் கூற
30. தாய் கயிற்றால் கட்டினாள் வெண்ணையுண்டானென்று!
வெண்ணையைக் கையில் கொண்டு நெய்க்கழுவாபோல்
உலகில் மக்கள் பிறதேவதைகளையே பெரிதும் நம்பி
கண்மூடித்தனமாகத் தொழுகின்றனர் அவர்களை
31. உலகளந்த உத்தமனை அவர்களும் மறந்தவர்களாக!
மறந்தான் அஜாமிளன் என்பவன்தன் குலம் கோத்ரம்
மணந்தான் ஒரு கீழ் சாதிபெண்ணின் அழகில் மயங்கி
துறந்தான் தன் ஆசாரம் அனுஷ்டானம் அனைத்தையும்
32. குணந்தான் மாறி வாழ்ந்து வந்தான் அவளுடனே!

அவளுடன் சோந்து பெற்றான் பலபிள்ளைகளும்
முன்பிறவியில் செய்த புண்ணியத்தின் பலனாக வைத்தான்
அவனுடைய பிள்ளைகளில் ஒருவனுக்கு நாராயணனென
33. பின்னொரு நாள் வீழ்ந்தான் அவன் மரணபடுக்கையில்!

மரணப்படுக்கையில் கிடந்தவனை எமதூதர்களும்
அழைத்துச்செல்ல அவனருகில் வந்திட்ட போது
மிரண்டவனாக அவர்களைக் கண்டு அவன் அலறி
34. அழைத்தான் மகன்பெயர் சொல்லி நாராயணாவென்று!
நாராயணா! என்ற சொல் கேட்ட எமதூதர்களும்
தலைதெறிக்க எடுத்தனர் ஓட்டம் அங்கிருந்து
நாராயணா என்ற ஒரு நாமத்திற்கே வலியென்றால்
35. இலை நிகர் அவன்தன் ஆயிரம் நாமங்களுக்கே!
ஆயிரம் நாமங்களுக்கு உரை எழுதி மகிழ்ந்தார்
ஆதிசங்கரரும் அவனையே பரனென்று உணர்ந்து
ஆயிரம் பலகோடி பல்லாண்டு பாடியே மகிழ்ந்தார்
36. ஆதியந்தமில்லா அவனை அந்த பெரியாழ்வாரும்!
பெரியாழ்வான் திருமகளாக இந்த அவனியில்
அவதரித்த கோதையுமே அந்த பரந்தாமனை நன்கு
அறிய நமக்கு முப்பது பாடல்களில் ஆயனாக
37. அவதரித்த அவனின் பெருமைகளை திருப்பாவையாக!
திருப்பாவை முப்பதும் செப்பிய அந்த கோதையும்
நோன்பிருந்து துதித்தாள் மாதவனையே மணக்க
ஒரு பாவை அவள் போன்று நோன்பிருந்து சொன்னால்
38. கோன் போன்ற மணாளனின் கரம் பிடித்து மகிழ்வார்!
மகிழ்வர் தம்வாழ்நாளெல்லாம் துதிப்பவர்கள்
பெறுவர் அனைத்து நலன்களையும் விருப்பம் போல்
நெகிழ்வர் அவன்தன் கருணையை உணாந்தவர்
39. தருவர் தங்கள் ஆத்மாவையே அவனிடம் சரணடைந்து!
சரணடைந்த எவரையும் அந்த எம்பெருமான்
பொய்க்காமல் காத்திடுவான் என்ற உணர்வுவர
மரணபயமின்றி நாமும் வாழ்ந்திடலாமென்று
40. பொய்கையடியானின் இந்த அந்தாதியால் உணர்ந்திடுவர்!